**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 18.06.2026**
**OS. No. 142/2016**
**வழக்கு சாட்சி PW.2–வெங்கடம்மாள், க/பெ.உலகநாதன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. 2ம்வாதி கிருஷ்ணம்மாளுக்கு அவரது பெற்றோர்களான மாரியம்மாள் மற்றும் நடுதம்பி நாயக்கர் ஆகியோர் உயில் எழுதி வைத்துள்ளனர், அந்த சொத்தில் வாதிகள் தான் அனுபவத்திலுள்ளார்கள் அது தொடர்பாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் என்னுடைய உறவினர்களா என்றால் ஆமாம், 2ம் வாதி கிருஷ்ணம்மாள் எனக்கு தங்கை முறை ஆவார், 1ம் வாதியின் மகளை எனது பேரனுக்கு திருமணம் செய்து வைத்துள்ளோம்.

2) மாரியம்மாள் மற்றும் நடுதம்பி நாயக்கர் ஆகியோர்களுக்கு எவ்வளவு நிலம் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. நடுதம்பி நாயக்கர் எந்த சர்வே எண்ணில், எவ்வளவு நிலத்தை, எந்த வருடம் எழுதி வைத்தார் என்றால் 48 செண்ட் நிலத்தை எழுதி வைத்தார், அதன் சர்வே எண் மற்றும் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட நடுதம்பி நாயக்கர் எழுதி வைத்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்கண்ட விவரங்கள் எனக்கு 2ம் வாதி கிருஷ்ணம்மாள் சொல்லி தெரியும்.

3) செல்வம் 30 வருடங்களுக்கு முன்பே கோயம்புத்தூர் காரமடைக்கு குடிபெயர்ந்தார் என்றால் சரிதான். 2ம் வாதி கிருஷ்ணம்மாள் தான் தாவா சொத்திலுள்ள வீட்டில் குடியிருந்தார் என்றால் சரிதான். அந்த வீடு பராமரிப்பின்றி இடிந்த நிலையிலும், குடியிருக்க இயலாத நிலையிலும் தற்போது உள்ளது என்றால் சரிதான். நடுதம்பி

நாயக்கருக்கு மொத்தம் மூன்று பிள்ளைகள். அவர்கள் பெயர்கள் பெருமாள், கிருஷ்ணன் மற்றும் வெங்கடாஜலம் ஆகும். அவர்கள் மூவரும் அவர்களது தந்தையின் சொத்துக்களை 40 வருடங்களுக்கு முன்பே பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரிதான். மேற்கண்ட 48 செண்ட் நிலத்தை பொறுத்து 2ம் வாதி கிருஷ்ணம்மாள் வாழ்நாள் முழுவதும் அனுபவித்து கொள்ளலாம் என்றும், ஆனால் யாருக்கும் விற்பனையோ, வேறு எந்த பரிவர்த்தனையோ செய்யக்கூடாது என்று நடுதம்பி நாயக்கர் எழுதி வைத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) 2ம் வாதி கிருஷ்ணம்மாள் இறந்த பிறகு அந்த சொத்தானது நடுதம்பி நாயக்கரின் ஆண் வாரிசுகளுக்கு சென்றடைய வேண்டும் என்று தான் அவர் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்கண்டவாறு எழுதி வைத்துள்ளதால் 2ம் வாதி கிருஷ்ணம்மாள் 1ம் வாதி செல்வத்திற்கு எழுதி வைத்துள்ள கிரைய பத்திரமானது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்கண்ட கிரையத்திற்கு 2ம் வாதி கிருஷ்ணம்மாள் 1ம் வாதியிடம் கிரைய தொகை ஏதேனும் பெற்றுள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5) பஞ்சாயத்து பேசியதாகவும், பாகபிரிவினை செய்து கொண்டதாகவும் நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள் ளவிவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2ம் வாதி எழுதி வைத்த கிரைய பத்திரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், 1ம் வாதி தெரிவித்ததன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதனால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை 1ம் வாதி காரைமடையில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எந்த காலத்திலும் 1ம் வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல, அவ்வப்போது வந்து 2 நாட்கள் தங்கியிருந்து செல்வார்கள்.

6) 2ம் வாதி கிருஷ்ணம்மாள் இறந்தபிறகு சட்டப்படி பிரதிவாதிகளுக்கு தான் சொத்தில் உரிமையுள்ளது என்றும், அதன்படி தற்போது வரை அவர்கள் தான் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. 1ம் வாதி செல்வம் அவருடைய தாயாருக்கு உரிமையில்லாத சொத்தை பொறுத்து மோசடியாக ஆவணம் பெற்றுள்ளார் என்றும், அந்த ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.